# தினமலர்

CHENNAI EDITION
17th Apr 2022




■ இந்திய இணையவெளி கூட்டமைப்பான 'சைபர் சொசைட்டி ஆப் இந்தியா' சார்பில், சென்னை எம்.ஜி.ஆர்., ஜானகி கல்லுாரியில் நேற்று, விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. இதில், சிறப்பு விருந்தினரான சைபர் கிரைம் டி.ஜி.பி., அமரேஷ் புஜாரிக்கு, இந்திய இணையவெளி கூட்டமைப்பு தலைவர் கார்த்திகேயன் நினைவுப் பரிசு வழங்கினார். உடன், இடமிருந்து: ஓய்வுபெற்ற காவல் துறை கண்காணிப்பாளர் அசோக் குமார், இந்திய இணையவெளி கூட்டமைப்பு முன்னாள் தலைவர் பாலுசாமிநாதன், செயலர் ஸ்ரீதர், ஓய்வுபெற்ற காவல் துறை கண்காணிப்பாளர் சித்தண்ணன், கருணாநிதி, இந்திய இணையவெளி கூட்டமைப்பின் துணைத் தலைவர் பிரேம் ஆனந்த், நிறுவன தலைவர் ஜெமினி ராமமூர்த்தி, துணைத் தலைவர் விஜயகுமார், இணைச் செயலர் விவேகானந்தன், பொருளாளர் சொக்கலிங்கம், சைபர் கிரைம் எஸ்.பி., சண்முகபிரியா மற்றும் இந்திய இணையவெளி கூட்டமைப்பு இணை பொருளாளர் துரை கண்ணையன்.

தினமலர்

CHENNAI EDITION
16th Apr 2022

# பள்ளி பாடத் திட்டத்தில் சைபர் குற்ற விழிப்புணர்வு

## சைபர் குற்றப் பிரிவு டிஜிபி வலியுறுத்தல்

**சென்னை, ஏப்.16:** சைபர் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு பாடங்களை பள்ளி பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டும் என சைபர் குற்றப் பிரிவு டிஜிபி அம்ரேஷ் புஜாரி வலியுறுத்தினார்.

சென்னை அடையாறு டாக்டர் எம்ஜிஆர்-ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இந்திய இணையவெளி கூட்டமைப்பு சார்பில் 'மின்வெளி ஏமாற்றுக்காரர்களிடம் ஏமாறாதே' என்ற பெயரில் கருத்தரங்கு சனிக்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்குக்கு கூட்டமைப்பின் தலைவர் வழக்குரைஞர் என்.கார்த்திகேயன் தலைமை வகித்தார். முன்னாள் தலைவர் பாலு சுவாமிநாதன், துணைத் தலைவர்கள் விஜயகுமார், வி.என்.பிரேம் ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கருத்தரங்கை தொடக்கி வைத்து தமிழக காவல் துறையின் சைபர் குற்றப்பிரிவு டிஜிபி அம்ரேஷ் பூஜாரி பேசியதாவது:

இந்தியாவில் சைபர் குற்றங்களால் நாளொன்றுக்கு ரூ.12 கோடி பறிபோகிறது. சைபர் குற்றங்களில் ஈடுபடுகிறவர்களால் தினமும் 80 இணையதளங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன.

சைபர் குற்றங்களால் பணத்தை இழந்தவர்கள் 1930 என்ற இலவச தொலைபேசி எண்ணில் 5 நிமிஷத்தில் புகார் அளித்தால், முழு பணத்தையும் மீட்டுத் தர முடியும். ஒரு மணி நேரத்துக்குப் பின்னர் புகார் அளித்தால் குறைந்தளவு பணத்தையே மீட்க முடியும்.

சைபர்குற்றங்களைகட்டுப்படுத்துவதற்கும், தடுப்பதற்கும் தகவல் தொழில்நுட்ப சட்டத்தை வலுப்படுத்த வேண்டும். இதற்காக புதிய கொள்கை முடிவுகளை அரசு எடுக்க வேண்டும். மேலும், அரசின் அவசரகால தகவல் தொழிநுட்ப கட்டமைப்பை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும். நம்பகத்தன்மைமிக்க இணையதளங்களையும் உருவாக்க வேண்டும். இணையவெளி பாதுகாப்பை உறுதி செய்ய இணையவெளி தணிக்கை கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

வங்கிகள் தங்களது வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் குறுஞ்செய்திகளில் 1930 இலவச தொலைபேசி எண் குறித்த விழிப்புணர்வு வாசகங்களை சேர்க்கவேண்டும். இந்த தொலைபேசி எண் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடம் சென்றடைந்தால், சைபர் குற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க முடியும். எதிர்கால சந்ததியினர் சைபர் குற்றங்களால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, பள்ளிப்பாடங்களில் சைபர் குற்றங்கள், விழிப்புணர்வு குறித்தவை சேர்க்கப்பட வேண்டும் என்றார் அவர்.